சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தை இடிக்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (1ப) எண்.619 நாள் 28.10.2009.

படிக்கப்பட்டவை:

1) மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் கடித எண்.Roc.No.F.2/EERD/VPM, நாள் 24.11.2008.
2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.93795/2008/TU3, நாள் 25.01.2009.

* * * * *

ஆணை:

இக்கோப்பு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தை இடிக்க அனுமதி கோரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு தொடர்பானதாகும்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தை இடிக்க விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். இக்கட்டிடம் 1400 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். இக்கட்டிடம் 1987–ஆம் ஆண்டு கட்டப்பட்டு 21 ஆண்டுகள் ஆகிறது. தற்போது இக்கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பியுள்ளார் என்றும் பழுதடைந்துள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு 28.08.2008 அன்று ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தப் பள்ளிக் கட்டிடத்தை இடிப்பதற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 03.04.2008–ல் இடிக்கப்பட வேண்டிய கட்டிடம் குறித்து அரசால் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:-

(அ) கட்டிடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டிடத்தின் பரப்பினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும், கட்டிடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் கட்டிடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்கு குறைவாகவும் இருந்தால் அத்தகைய கட்டிடங்களை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்கலாம்.

.//த.பி.பா.//.

(ஆ) கட்டிடத்தின் வயது 30–லிருந்து 40–க்குள்ளும் இருந்து கட்டிடங்களின் பரப்பளவு 450 சதுர அடிக்கு மேலாக இருந்தால் இத்தகைய கட்டிடங்களை இடிப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி ஆணை பிறப்பிக்கலாம்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இந்நேர்வில் இடம் பெற்றுள்ள கட்டிடத்தின் வயது 21 ஆண்டுகள் ஆகிறது என்றும் கண்காணிப்புப் பெறியாளர் (ஊரக வளர்ச்சி) தன்னுடைய ஆய்வறிக்கையில் கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை மோசமாக உள்ளது என்றும் இவ்வாறு மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தில் பள்ளி நடத்துவது அபாயகரமானது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்த இடத்தில் புதியப் பள்ளிக் கட்டிடம் கட்ட சர்வ சிக்சா அபியன்(Serva Shikhsha Abiyan Scheme) திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இடிக்கப்பட வேண்டிய பழுதடைந்த கட்டிடங்களின் பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார்.

5. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தின் வயது 21 ஆண்டுகளே ஆகியுள்ள போதிலும், கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையற்ற நிலையை கருத்தில் கொண்டு இதனைச் சிறப்பினமாகக் கருதி இந்தக் கட்டிடத்தினை இடிக்க அனுமதி அளிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசை கோரியுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் 1400 சதுர அடி பரப்பளவு உடைய கட்டிடம் கட்டப்பட்டு 21 ஆண்டுகளே ஆனாலும், கட்டிடத்தின் மோசமான ஸ்திரத்தன்மையை கருத்தில் கொண்டு இக்கட்டிடத்தை இடிக்க சிறப்பினமாக கருதி அனுமதி அளிக்க முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக்வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை – 15,
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

நகல்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்